கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.

*DEPOSITION OF WITNESS –Crl. Misc.39*

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Calandar Case .No. 706/2025**

Deposition of witness for Petitioner: P.W.

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.மணி |
| கணவர்/ தந்தை பெயர் | : | போஜன் |
| தொழில் | : | சிறப்பு சார்பு ஆய்வாளர், தேனி காநி |
| கிராமம் | : | தேனி |
| தாலுகா / மாவட்டம் | : | தேனி |
| வயது | : | 54/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09/07/2026

*(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். )*

**முதல் விசாரணை**

நான் தேனி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மற்றும் புலன் விசாரணை அதிகாரியாக இருந்த சார்பு ஆய்வாளர் ராஜமாணிக்கம் என்பவர் பணிமாறுதலாகி சென்றுவிட்ட காரணத்தினால், ஆவணங்களின் அடிப்படையிலும் அவரது கையொப்பம் நன்கு தெரியும் என்பதாலும் இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 04.11.2025 அன்று 13.00 மணிக்கு நிலைய பொறுப்பில் சார்பு ஆய்வாளர் இருந்தபோது, தேனி சிவராம் நகரைச் சேர்ந்த வேல்முருகன் மகள் ஹேமலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று பரிசீலித்து அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண் . 623/2025 ஆக பிரிவுகள் 296(b), 115(2), 351(2) of BNS மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு4-ன் படியும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். ( **அந்த புகார் மனு அ.சாஆ. 2ஆக குறியீடு செய்யப்படுகிறது, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது).** புகாரையும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். மற்ற நகல்களை உயர்அதிகாரிகளின் பார்வைக்கு வைத்தார். இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் 04.11.2025 அன்று 16.00 மணிக்கு சென்று சாட்சிகள் ஹிஹரன் மற்றும் பிரகாஷ் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை

மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். (**அந்த பார்வை மகஜர். அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது மாதிரி வரைபடம் அ.சாஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது) .** சாட்சிகள் 1 முதல் 7 வரையானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரியை 05.11.2025 அன்று காலை 07.00 மணிக்கு தேனி எம்.ஜி.ஆர் நகர் எதிரியின் அப்பா வீட்டில் வைத்து கைது செய்து உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து எதிரியை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். தனது விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக மேற்படி பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.*1* கொடுத்த பொய்யான புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல*.* சாட்சிகளை சொன்ன நேரத்தில் விசாரிக்கவில்லை என்றும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் தயாரிக்கப்படாமல் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல*.* எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்வில்லை என்றால் சரியல்ல*.* எதிரிக்கும் இந்த வழக்கிற்க்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல*.*

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.09 21:15:27 +0530